**<u>OS No 149/2016</u>**

**<u>Dated 18.06.2025</u>**

**<u>வா.சா.1 மாரியம்மாள்</u>**

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். எனது தகப்பனாரின் சொத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னுடன் பிறந்தவர்கள் வேல்முருகன், சண்முகம், சுப்புலட்சுமி, மூக்கம்மாள், வேலம்மாள் மொத்தம் என்னுடன் சேர்ந்து 6 நபர்கள் வாரிசுகள் ஆவோம். 5ம் பிரதிவாதி உடல்ஊனமுற்றவர் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி இதுநாள் வரை 1ம் பிரதிவாதி தான் பராமரிப்பில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நாங்கள் 5 பேரும் சேர்ந்து தான் 5ம் பிரதிவாதியை பார்த்துகொள்வோம். எனக்கு திருமணம் 12.06.1994 ல் நடைபெற்றது. எனது கணவர் அரசு ஊழியர் என்றால் சரிதான். எனது திருமணத்திற்கு எவ்வளவு நகை போட்டார்கள் என்றால் 5 பவுண் நகை போட்டார்கள். சீர்வரிசை செய்வதாக கூறினார்கள் ஆனால் கொடுக்கவில்லை. திருமணம் ஆன காலத்தில் இருந்து நான் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் வேலை பார்க்கும் இடங்களில் நாங்கள் குடியிருந்தோம். 1 முதல் 5 பிரதிவாதிகளில் யார் யார் தற்போது வழக்கு நடத்தி வரும் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எத்தனை அயிட்ட சொத்துக்களை காண்பித்து வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் எனது தாய் தகப்பனாரின் சொத்துக்களை காண்பித்துள்ளேன். பிராது மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பு விவரங்கள் நான் தான் வழக்கறிஞரிடம் கூறினேன். மேற்படி பிராது மற்றும் முதல் விசாரணையில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். தினசரி நாளிதழில் என்ன விளம்பரம் செய்தேன் என்றால் அந்த விவரம் குறித்து எனது வழக்கறிஞரிடம் தான் கேட்க வேண்டும். எனது தகப்பனார் 2007ம் ஆண்டு காலமானார். எனது தகப்பனாரின் ஈமக்கிரியை செலவுகள் அனைத்தையும் 1ம் பிரதிவாதி தான் செய்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் பராமரிப்பில் எனது தாய் தந்தை இருந்தார் என்றால் சரியல்ல. எனது தாய் மற்றும் தந்தை பராமரிப்பில் தான் நாங்கள் அனைவரும் இருந்தோம். எனது தகப்பனார் நோட் புக் கடை வைத்து நடத்தி வந்தார். அவருக்கு என்ன வருமானம் வந்தது என்பது குறித்து தெரியாது. 1ம் பிரதிவாதி பெட்டிக்கடை வைத்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான்.

அது எனது தந்தையின் சம்பாத்திய கடை ஆகும். எனக்கு சரண்யா, சங்கரநாராயணன் என்ற குழந்தைகள் உள்ளனர். எனது பெண் குழந்தையின் சடங்கு, சீர்வரிசையை 1ம் பிரதிவாதி செய்தார் என்றால் சரியல்ல. எனது அம்மா பார்த்துகொண்டார். எனது தாயார் இறந்த ஆண்டு நினைவில்லை. எனது தாயாரின் இறப்புசெலவு, கடன் வாங்கியதை 1ம் பிரதிவாதி செய்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் மற்ற நபர்களிடம் ரூ.5 லட்சம் கடன் வாங்கி இருந்தார் என்றால் சரியாக நினைவில்லை. மேற்படி கடன்களை 1ம் பிரதிவாதி தான் அடைத்தார் என்றால் சரியல்ல. நான் தான் எனது தகப்பனாருக்கு வாரிசு என்பதற்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதி சுயமாக பெற்ற சொத்துக்கள் எனது தகப்பனார் சம்பாத்தியத்தில் வாங்கியதாக கூறுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1, 2, 5,6 அயிட்ட சொத்துக்களை பொறுத்து தாக்கல் செய்துள்ள சொத்துவிவரம், பட்டா எண் சர்வே எண். குறித்து தெரியுமா என்றால் எண்கள் தற்போது நினைவில்லை. மேற்படி சொத்துக்களின் நான்கு எல்கைகள் குறித்து தெரியுமா என்றால் நினைவில்லை. 19.02.1971 தேதிய 3 வது அயிட்ட சொத்தின் நான்கு மால் எல்கை குறித்து தெரியுமா என்றால் நிறைய சொத்துக்கள் இருப்பதால் நினைவில்லை. மேற்படி சொத்தின் சர்வே எண் நினைவில்லை. 3 வது அயிட்ட சொத்து வீடா நஞ்சையா என்பது குறித்து தெரியுமா என்றால் நினைவில்லை. தாவா 4ம் அயிட்ட சொத்தின் பட்டா எண், சர்வே எண், விஸ்தீரணம் குறித்து தெரியுமா என்றால் நினைவில்லை. தாவா 5 சொத்து பட்டா எண், சர்வே எண், விஸ்தீரணம் குறித்து தெரியுமா என்றால் நினைவில்லை. 8 முதல் 13 , 9, 12, 15, 16 அயிட்ட சொத்துக்களின் சர்வே எண் பட்டா எண், விஸ்தீரணம் குறித்து தெரியுமா என்றால் நிறைய சொத்துக்கள் இருப்பதால் நினைவில்லை. 17,18,19 அயிட்ட சொத்துக்களின் 2ம் பிரதிவாதி சுயமாக பெற்ற சொத்தின் பட்டாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் தகப்பனார் சம்பாத்தியம் தான். தனியாக யாரும் சம்பாதிக்கவில்லை. 23ம் அயிட்ட சொத்துக்களை பொறுத்து 2ம் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்றால் தெரியாது. 25ம் அயிட்ட சொத்துக்களை பொறுத்து 2ம் பிரதிவாதி பெயரில் தீர்வை ரசீது என்றால் வீட்டிற்கு மூத்தவர் என்ற பெயரில் எனது தகப்பனார் 1, 2 பிரதிவாதி பெயர்களில் கிரையம்பெற்றுள்ளார்.

அதனால் அவர்கள் பெயரில் ஆவணங்கள் உள்ளது. மொத்தம் 7 வீடுகள் உள்ளது. யார் யார் எந்தெந்த வீடுகளில் உள்ளனர் என்றால் தெரியும். அண்ணன், அண்ணி ஒரு வீட்டிலும், அக்கா ஒரு வீட்டிலும், சின்ன அண்ணன் ஒரு வீட்டிலும் உள்ளார். மற்ற வீடு வாடகைக்கு விடப்பட்டதா என்பது குறித்து தெரியாது. மேற்படி வீடுகளின் கதவு எண்கள் நினைவில்லை. மேற்படி வீடுகளை 1ம் பிரதிவாதியும் 2ம் பிரதிவாதியும் பராமரிப்பு செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. நானும் போய் வந்து கொண்டிருக்கிறேன். 3ம் பிரதிவாதி பட்டுக்கோட்டையில் இருந்து வருகீறார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதிக்கு என் அக்காவின் மகளை தான் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதிக்கு ஒரே மகள் தான் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியின் மனைவியோ, மகளும் 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி என்னுடன் நல்ல பேச்சுவார்த்தையிலும் எனக்கு மட்டுமே செய்வார் என்றால் சரியல்ல. அனைவருக்கும் செய்வார். அனைவரிடம் நல்ல பேச்சுவார்த்தையில் தான் இருப்பார். 3ம் பிரதிவாதிக்கும் அவரது மனைவிக்கும் இடையே குடும்ப பிரச்சனை காரணமாக கருத்து வேறுபாடு ஏற்பட்டு இந்நீதிமன்றத்தில் HMOP NO. 153/2015 என வழக்கு நடந்து வந்தது என்றால் அவர்களுக்குள் என்ன பிரச்சனை என்பது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்திருந்தால் என்னுடன் யாரும் சரிவர பேசுவது கிடையாது. 3ம் பிரதிவாதியின் மனைவியின் MC வழக்கு சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றால் அவர்களுக்குள் என்ன பிரச்சனை என்பது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்திருந்தால் என்னுடன் யாரும் சரிவர பேசுவது கிடையாது. மேற்படி வழக்குகளுக்கு பின்னர் தான் நான் வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி 3ம் பிரதிவாதியின் குடும்ப வழக்குகளை வாபஸ் பெற்றால் நான் இவ்வழக்கை வாபஸ் பெறுவதாக கூறினேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் சொத்தை கோரி நான் வழக்கு தாக்கல்செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் OP NO. 130/2024 வழக்கு தாக்கல்செய்து விவாகரத்து மனு அனுமதிக்கப்பட்டுவிட்டது என்றால் கேள்விபட்டேன் அவர்கள் குடும்ப பிரச்சனை குறித்து தெரியாது.

3ம் பிரதிவாதியின் மகளின் திருமணத்திற்கு நான் செல்லவில்லை என்றால் அந்த திருமண விவரம் குறித்து எனக்கு தெரியாது. திருமணத்தின் போது மேற்படி 2ம் பிரதிவாதி உழைப்பில் தான் 20 பவுண் நகையும் 50 ஆயிரம் ரொக்கமும், 50 பண்ட பாத்திரங்களும் கொடுத்தனர் என்றால் சரியல்ல. எனது குழந்தைக்கு நடந்த சுப நிகழ்ச்சிகளுக்கு 3 பவுண் செயினும், சீர்வரிசையும் செய்தனர் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் நோய் வாய்ப்பட்ட காலத்தில் 1, 2 பிரதிவாதிகள் தான் கவனித்து வந்து மருத்துவ செலவு 1 லட்சம் செய்தனர் என்றால் சரியல்ல. எனது தாயார் நோய் வாய்ப்பட்ட காலத்தில் 1, 2 பிரதிவாதிகள் தான் கவனித்து வந்து மருத்துவ செலவு செய்தனர் என்றால் சரியல்ல. மேற்படி தாவா 7 வீடுகளில் போர்வெல், வீடு பராமரிப்புகள் 1, 2 பிரதிவாதிகள் செய்து வந்தனர் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் சேமிப்புகளை தான் எடுத்து பராமரித்துள்ளனர். 5ம் பிரதிவாதிக்கு தற்போது 35 வயது இருக்கும். மேற்படி 5ம் பிரதிவாதியை 1, 2 பிரதிவாதிகள் தான் கவனித்து வந்து மருத்துவ செலவு மற்றும் பராமரிப்பு செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் சேமிப்புகளை தான் எடுத்து பராமரித்துள்ளனர். எனது தகப்பனார் முத்துவேல் என்பவரிடம் பெற்ற கடன் ரூ52 ஆயிரத்தை 2ம் பிரதிவாதி தான் அடைத்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் சண்முகம் பிள்ளை என்பவரிடம் பெற்ற கடன் ரூ.72 ஆயிரத்தை 2ம் பிரதிவாதி தான் அடைத்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வேல்டாக்டர் என்பவரிடம் பெற்ற கடன் ரூ70 ஆயிரத்தை 2ம் பிரதிவாதி தான் அடைத்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் குருநாதன் என்பவரிடம் பெற்ற கடன் ரூ10 ஆயிரத்தை 2ம் பிரதிவாதி தான் அடைத்தார் என்றால் சரியல்ல. 2005ம் ஆண்டு பாண்டியன் வங்கியில் எனது தகப்பனார் பயிர் கடன் பெற்றதை 2ம் பிரதிவாதி தான் அடைத்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் திருவேங்கடம் என்பவரிடம் பெற்ற கடன் ரூ27,500 ஆயிரத்தை 2ம் பிரதிவாதி தான் அடைத்தார் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதியை 1, 2 பிரதிவாதிகள் தான் படிக்க வைத்தனர் என்றால் சரியல்ல. எனது தகப்பனார், நான், 1,2 பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து தான் உழைத்தோம். எனது தாய் தகப்பனார் இருக்கும் போது நான் ஏன் பாகம் கோரவில்லை என்றால் வீடு காடு கரைகளை எனது தகப்பனார் எனக்கு தருவதாக கூறியதால் நான் எதுவும் வழக்கு தாக்கல்செய்யவில்லை.

1, 2 பிரதிவாதிகள் உள்ள வீடு, நஞ்சை புஞ்சை அவர்கள் சுயமாக வாங்கிய கிரைய சொத்துக்களில் பாகப்பிரிவினை கோர எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி 1, 2 பிரதிவாதிகளை பழிவாங்கவேண்டும் என்ற நோக்கில் பொய்யான சங்கதிகள் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கும் 1, 2 பிரதிவாதிகளுக்கும் குடும்ப பிரச்சனை இருந்ததால் அதற்காக 1, 2 பிரதிவாதிகளை வீண் அழைகழிப்பு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராதுசொத்துக்கள் அனைத்தும் சர்வே எண் பட்டா எண் விஸ்தீரணம், நான்கு மால்கள் உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல. நீங்கள் கோரும் பரிகாரம் உங்களுக்கு கிடைக்கதக்கது அல்ல என்றாலும், 1,2 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

**5ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குவி இல்லை.**